மார்த்தாண்டம்

# நேசமணி கிறிஸ்தவ கல்லூரியில் ஐம்பெரும் விழா




▶ மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் விளையாட்டு விழா நடந்தது.

**நாகர்கோவில், மார்ச் 28:** மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் ஐம்பெரும் விழா நேற்று தொடங்கியது.

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் இந்த ஆண்டுக்கான விழாக்கள் நேற்று தொடங்கியது. 31ம் தேதி வரை 5 நாட்கள் விழா நடக்கிறது. முதல் நாளான நேற்று விளையாட்டு போட்டி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் டாக்டர் பால்ராஜ் தலைமை வகித்தார். தாளாளர் டாக்டர் வினோத்குமார் முன்னிலை வகித்தார். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் முருகவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்தார்.

இன்று எஸ்சி எம் விழா நடக்கிறது. பெங்களூரைச் சேர்ந்த பாஸ்டர் இன்பராஜ் ஜெபக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். மூன்றாவது நாள் பைனான்ஸ் தினம் கொண்டாடப்படுகிறது. இதில் நடிகர் தாமு சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். நான்காவது நாள் கல்லூரி ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. குமரி சிஎஸ்ஐ பேராய பிஷப் செல்லையா தலைமை வகிக்கிறார். கவிஞர் அறிவுமதி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

ஐந்தாவது நாள் மாணவர் பேரவை விழா நடக்கிறது. கவிஞர் மோகனசுந்தரம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இதற்கான ஏற்பாடுகள் கல்லூரி முதல்வர் டாக்டர் பால்ராஜ், தாளாளர் டாக்டர் வினோத்குமார், ஜெனரல் கன்வீனர் டாக்டர் ஸ்டாலின், துணை முதல்வர்கள் டாக்டர் பிஜு, டாக்டர் ஷீலா கிறிஸ்டி, பர்சர் டாக்டர் ஜேக்கப் வேதராஜ் தலைமையில் செய்யப்பட்டுள்ளது.